செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம் ஆனந்த ஸு கார்த்திகைமீ கசு-உ வெள்ளிக்கிழமை (29-11-1974) [இல: நஉ

# இரு பெரு நீதிகளின் சந்திப்பு

## "நாவலர் — பேர்சிவல்"

[ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ]



"ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுனர்" "கபிலபரணர்" என்ற தொடர்களை நினைவுகூர்விக்கும் முறையில் "நாவலர்-பேர்சிவல்" என்ற இருவர் நட்புறவு சென்ற நூற்றுண்டில் நாளொரு வண்ணம் வளர்ந்துகொண்டேயிருந்தது.

1834-ஆம் ஆண்டில் ஆறுமுகம் என்றொரிளைஞர் தமக்குப் பன்னிரண்டாம வயசு தொடங்கும்போது, பேர்சிவல் பாதிரியார் நடத்தும் யாழ். மத்திய கல்லூரியிற் சேர்க்கப்பட்டார்.

ஆறுமுகம் தமிழ் இலக்கண இலக்கியங்களை இரவிலும் காலையிலும் தக்க வித்துவான்களிடம் படித்துக்கொண்டே மத்திய கல்லூரியில் ஆங்கிலம் பயில்வாராயினார். ஏழு வருடங் கழிந்தது.

ஆறுமுகத்தின் தமிழ் இங்கிலிஷ் திறமையைக் கண்ணுற்ற பாதிரியாரின் பார்வை ஆறுமுகத்தின்மீது பதிந்தது. எட்டாம் வருடம் முதல் நான்கு வருட காலம் கீழ் வகுப்புக்கு ஆங்கிலமும் மேல் வகுப்புக்குத் தமிழும் கற்பிக்கும் ஆசிரியரானார் ஆறுமுகம். அதன்மேல் பன்னிரண்டாம் வருட முதல் பாதிரியார் தமக்குத் தமிழ்ப் பண்டிதராக்கிக் கொண்டார் ஆறுமுகத்தை. ஆறுமுகம் பாதிரியார் விரும்பியவாறு பைபிளை நல்ல தமிழில் அமைத்துக்கொடுத்தார். 1848 இல் அது சென்னையில் அரங்கேற்றப்பட்டது. அரங்கேற்றம் பேர்சிவல் பாதிரியாருக்குப் பெருவெற்றியளித்தது. முன்னமே மூளைகொண்டிருந்த நட்புறவு வளர்ந்து கனிதரும் விருட்சமாகியது. இவ்வாறு பதினான்கு வருடம் கழிந்தது.

1848-ம் ஆண்டு ஆறுமுகத்துக்கு வயசு 25; தமது சமயத்தை வளர்க்கவேண்டுமென்ற ஆசை ஆறுமுகத்தைக் கொள்ளை கொள்ள, ஆறுமுகம பாதிரியாரைப் பிரியும் நிலைநேர்ந்தது. பிரிவாராயினார். பிரிவுத் துயரம் பாதிரியாரைப் பெரிதும் பாதித்திருக்கலாம். சிறிது காலத்தின் பின் பாதிரியார் தமது பாதிரி உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டுச் சென்னைக்குப்போய் அங்கே ஒரு கல்லூரியில் தமிழ்ப் பண்டிதரானார்.

1849ம் ஆண்டு தமிழ்ப் பண்டிதர் நாவலராக, பேர்சிவல் தமிழ்ப் பண்டிதராயினார். இருவரும் சென்னையிற் சந்திப்பதுண்டு; சந்திப்பு எப்படியிருக்கும்? "பிரிந்தவர் கூடினாற் பேசவேண்டுமோ" "இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்"

"எல்லாச் சமயமும் இருப்பது நீதி" என்பது சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கை. நீதி வேறு; சமத்துவம் வேறு.

சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகிய நீதியை நன்குணர்ந்தவர் நாவலர். அப்படிப்பட்ட நாவலர் மற்றைய மதத்தவருக்கு உதவிபுரியத் தடைப்படாதிருப்பதில் ஆச்சரியம் இல்லை. அதே சமயத்தில் அநீதியான மதமாற்ற விஷயத்தில் நெருப்பாயிருந்தார் நாவலர். நாவலரின் நடுநிலை நீதி பேர்சிவலைப் பெரிதும் கவர்ந்தது.

வடக்கே வீரமா முனிவர் முதல் கால்வெல்ட் பரியந்தம் பாதிரிமாரைத் தமிழ்ப் பண்டிதர்கள் தொடர்ந்து வயிறு வளர்ப்ப, இந்தச் சின்னஞ்சிறிய யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு பேர்சிவல் தமது தமிழ்ப் பண்டிதரைத் தொடர்ந்து, நீதிவழி நின்று, தமது அருமந்த ஆவியை ஓம்புவராயினார். நாவலரை மமகுரு (எனது குரு) என்று, பகிரங்கமாகவும் சொல்லத் தொடங்கி விட்டார் பேர்சிவல். இருவர் நட்புறவும் இருந்தவாறு!

1869ஆம் ஆண்டில் தில்லைத் தில்லைத் தீக்ஷிதர் அச்சுறுத்தினார் என்றும, இராமலிங்கசுவாமி அவதூறு செய்தார் என்றும், நாவலர் இருவர் மீதும் தொடுத்த மஞ்சக்குப்பக் கோட்டு வழக்கில், பேர்சிவல் நாவலருக்குக் கொடுத்ததொரு நற்சான்றிதழ் நீதிபதிக்கு எடுத்துக் காட்டப்பட்டது. காட்டி நாவலர் பெருமையை விளக்கஞ்செய்தவர் அத்துவக்காத் சௌந்தரநாயகம்பிள்ளை. இவர் யாழ்ப்பாணத்தவர்; கத்தோலிக்கர். நீதிபதி வெள்ளையர்.

பச்சைச் சைவர்மீது தொடுத்த வழக்கில், புரட்டஸ்தாந்துப் பாதிரியார்கொடுத்த சான்றிதழ் கத்தோலிக்க அத்துவக்காத்தால் வெள்ளை நீதிபதிக்கு விளக்கஞ் செய்யப்பட்டது.

வழக்கில் தீக்ஷிதர் தண்டிக்கப்பட்டார். இராமலிங்க சுவாமி அவதூறு செய்யவில்லையென்று கூறித தப்பிப்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## ஆறுமுக நாவலர் நினைவு விழா

### நாவலர் மண்டபத்தில்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை வழமைபோல நாவலர் ஆசசிரம மண்டபத்தில் 5-12-74 வியாழக்கிழமை நடைபெறும். மூற்பகல் 9 மணிக்கு சிவபூஜா மண்டபத்தில் சிவபூசையும் நாவலர் மண்டபத்தில் நடராஜர் பூசையும் தமிழ்மறை ஓதலும் நாவலர் சற்குருமணிமாலை ஓதலும நடைபெறும். இரவு விரிவுரைக் கூட்டம் நிகழும்

நேயர் நெஞ்சம்

உ
சிவமயம்

# சைவ ஆலயத்தை வைணவ ஆலயமாக்கலாமா?

மாயையின் வலியோ ஞகி மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய் துகநூற் றெட்டு
காயம தழிவின்றுகிக் கடவுளர்க் கலக்கண செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்றுள் சென்னி வைப்பாம்

சைவ ஆலயங்கள் சிவாகம விதிப்படி நடைபெறுவன. வைணவ ஆலயங்கள் வைணவ முறைப்படி நடைபெறுவன, சைவ ஆலயங்களிலே சைவசமய விதிமுறைகளையே பின்பற்றுதல் வேண்டும். பின்பற்றுதொழுகின் எண்ணற்ற தீங்குகள் ஏற்படும். இது அநுபவ முடிபுமாகும்.

தனிச்சிறப்பு வாய்ந்த சைவப் பெருமக்கள் வாழும் யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றின் கந்தசுவாமி கோயிலில் மகா விஷ்ணு பிரதிஷ்டை பற்றிய விளம்பரமொன்று கிடைத்துள்ளது. அதிலே சிவமயம், குகமயம் என்பவற்றிற்குப் பதிலாக ராமஜயம் உளது. சைவத்திருவுருவப்படமுமில்லை. சுதர்சனமென்னும் வைணவசமயச் சின்னமேயுளது. சைவத் தோத்திரத் திருப்பாடல் எதுவுமில்லை. வைணவ ஆழ்வார் பாடலேயுள்ளது. அவ்விளம்பரம் சிவபரமாக அமையவில்லை. விஷ்ணுபரமாக வைணவ ஆலயத்திற்குரியதாகவேயுளது.

ஆகவே இச்செயல் பொருந்துமா பொருந்தாதா என்பதைச் சைவசமய சபைகளும், சைவக் குருமாரும், சைவப் பெரியார்களும் பிறரும் ஆராய்ந்து ஆவன செய்வார்களாக.

சில மாதங்கட்கு முன்னர் இவ்வாலயத்திலே கந்தபுராண விழாவிலே பங்கு பற்றிய பொழுது யாவும் சிவபரமாக விளங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது.

விஷ்ணு முதலிய தேவர்களைச் சூரன் முதலிய அசுரர்களிடமிருந்து பாதுகாத்தவர் கந்தக்கடவுள் என்பது கந்தபுராணமன்றோ!

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மால்அயன் தனக்கும்ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி அன்றே.

சைவ சித்தாந்த அடியவன்
சைவப் பாதுகாப்பு இயக்கம்

யாழ்ப்பாணம். 26-11-74

## பூரணை நிகழ்ச்சித் தொடரில் இன்று

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை பூரணைத்தின நிகழ்ச்சித் தொடரின் பதினேழாவது நிகழ்ச்சியாக இன்று (29-11-74 வெள்ளிக்கிழமை) நல்லூர் நாவலர் மண்டபத்தில் மாலை 6-45 மணிக்கு ஆசிரியர் சி. சிவரத்தினம் 'நாவலர் சமயத்தொண்டு'' என்னும் பொருள் பற்றிப் பேசுவார்கள்.

7.30 மணிக்கு, செல்வி நவமணி நாகலிங்கம் அவர்களின் பக்திப் பாடல்கச்சேயும் இடம் பெறும்.

## நாவலர் குருபூசை

கார்த்திகைத் திங்கள் 20-ஆம் நாள் [5-12-74] வியாழக்கிழமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர் நெஞ்சம்.

ஐ. நா. மனித உரிமைகள் தினம்.

# ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கும் இது ஏற்ற தினம்

ஐயா,

கடந்த வருடம் ஐ. நா. சபை மனித் அடிப்படை ஜனநாயக உரிமைகள் சாசனத்தைப் பிரகடனப்படுத்திய 25-ம் ஆண்டு நிறைவையொட்டி ஈழத்தமிழ் மக்களும் வெள்ளிவிழாக் கொண்டாடினர். கொழும்பில் ஒரு கூட்டமும், யாழ்ப்பாணத்தில ஒரு கருத்தரங்கும் அந்நாளில் இடம் பெற்றது.

'இந்துசாதன' ஆசிரியர் ஆர். என். சிவப்பிரகாசம் ஐயா அவர்களும் யாழ்ப்பாணக் கருத்தரங்கில கலந்து கொணடு கருந்துரை வழங்கியதுடன், 'இந்து சாதனமும்' தமிழ, ஆங்கில வெளியீடுகளில் சிறப்புக் கட்டுரைகளுடன், ஆசிரிய தலையங்கங்களும் தீட்டியிருந்தது அந்நாளை யொட்டி சிறப்பு அம்சங்களுடன் அன்று வெளிவராத தேசிய புதினப்பத்திரிகைகளுக்கு இந்துசாதனம உதாரண வாயிலாக நல்ல முன்மாதிரி காட்டியிருந்தது.

ஈழத்தில் தமிழ்த்தேசியப் புதினப்பத்திரிகைகள் தானும் மனித உரிமைகள் தினத்தை புறக்கணித்து வந்ததனால் மனித உரிமைகள் யாவை அவற்றை ஏன் மறக்கக்கூடாது என்ற அறிவு சாதாரண மக்களிடய அபூர்வமாகவேயுள்ளது,

எந்த வழியில் பார்த்தாலும் கடந்த ஆண்டில் மனித உரிமைகள் தினத்தை யொட்டி இடம் பெற்ற தலைநகர் பொதுக் கூட்டமும, யாழ்ப்பாணக் கருத்தரங்கும், இந்துசாதன சிறப்பு அம்சங்களும், ஆசிரிய தலையங்கங்களும் முன்னோடி நிகழ்ச்சிகளாக யாவராலும் பாராட்டப்பட வேண்டியவை இவ்வாண்டும் கடந்த ஆண்டில் ஆரம்பித்த பணியைச சம்பந்தப்பட்டவர்கள் சிறப்பாக இந்துசாதனம் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வண மாட்டின் லூதர் கிங் போன்றும், அண்ணல காந்தியடிகளும் எடுத்த சாத்வீக இயக்கங்களால் உலகின் மனச்சாட்சி உறுத்தப்பட்டதால் தான் இன்று இனவேறுபாடு இன ஒழிப்புக் கொள்கைகள் மாறி வருகின்றன இந்திய விடுதலை அங்கோலியாவின் மீட்புக்கான போததுக்கல் தேசத்தின் மனமாந்தம் யாவற்றிக்கும். உலக மனச்சாட்சியின உறுத்தலே காரணம் தென ஆபிரிக்காவிலும் இறைவன் அருளால் மனமாற்றங்கள் ஏற்படுவது கண்டு

ஈழத்தமிழ் மக்களும் தாம் இழந்த உரிமைகளைப் பகை முடிக்காது சாத்வீக முறையில் அன்பு மார்க்கத்தில் மீட்டுப் பெறவேண்டுமாகில் உலகின் மனச்சாட்சியையும், சிறப்பாக சாந்தசொருபியான கௌதம புதத்ர் மதத்தைப் பின்பற்றுவர்களது. மனச்சாட்சியையும் உறுததும்படியான சாதவீக அன்புவழிப் பிரசாங்களை ஆரமபிக்க வேண்டும். அதற்கு இவ்வாண்டு 10-12-74 இல் பெரும் மனித உரிமைகள் தினம பயன்பட வேண்டும்.

மன்றங்கள், கழகங்கள், பொது இயக்கங்கள் சாதி இன மத அரசியல் வேறுபாடுகள் கடந்த அறிவு வழி அன்புமுறைக் கருத்தரங்குகள் அந்நாளில் நடத்த முன்வரவேண்டும் சிங்களப் பிரமுகர்களையும் இக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளச் செய்ய முடியுமாகில் நல்லது திரு. கே. நேசையா அவர்கள் கடந்த ஆண்டில் ஒழுங்கு செய்திருந்த மனித உரிமைகள் தினக் கருத்தரங்கிற் சிங்களக் கனவான்கள் இருவரை அழைத்திருந்தார் இருவரும் கருத்தரங்கில் கலந்து கொளவதாக அழைப்பை ஏற்றிருந்தார்கள்

தவிர்க்க முடியாத காரணங்களால் அவர்கள் பங்குபற்ற இயலாது போனது துர்ப்பாக்கியமானதே. ஆயினும் அங்கிலிகன் திருச்சபையின் குருநாக்கல பிசப். அதி. வண. லக்ஸ்மன் விக்கிரமசிங்கா ஆண்டகையின் ஆசிச் செய்தி கருத்தரங்கில் வாசிக்கப்பட்டதும், பதினப பத்திரிகைகளில் சிறப்பாக 'இந்து சாதனத்தில் வெளியிடப்பட்டது ஆறுதல் அளித்தது. இவ்வாண்டு நடைபெறும் கருத்தரங்குகளில் தென்னிலங்கைப பிரமுகர்களும் கலந்து கருத்துப் பரிமாறுவது விரும்பத்தககது,

ஈழத் தமிழர் உரிமை நாளை வெளி நாடுகளில் உள்ள தமிழரும் பொதுக் கூட்டங்களை நடத்த முடியாவிடிலும். சிறு கருத்தரங்குகள் நடத்துவதன் மூலமேனும் அனுட்டிக்க வேண்டும்.

நாடு இல்லாத, தாயகம் காணத் துடிக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஐ. நா. வில் அங்கத்துவம் பெருத ஒரு அமைப்பாக இருந்தும் அவர்கள் குரல் ஐ நா. பொதுச் சபையில் ஒலிக்கப் போகிறது. இதனைச் சாதித்த பெருமையில் யூத இனததினரான சிங்கருக்கும் பெரும்பங்கு உண்டு தமிழன் குரல ஐ. நா வில் ஒலிக்கும நாள் என்றோ! ஒரு சிங்கள பிரமுகர் முயற்சியால் அது ஈடேறுமாகில் சிங்கள மக்களும் பெருமைப்படலாம். எதற்கும் மனச் சாட்சி உறுத்த வேண்டும்.

உலக மக்களை ஈழத் தமிழர் விடயத்தில் மனச் சாட்சி வழி இயங்கச் செய்ய எதிர்வரும மனித உரிமைகள் தினத்தை அனைத்துலகத் தமிழ் மக்களும் பயன்படுததுவார்களாக.

அன்பன்

**த, சா. ஆனந்தன்,**
1, இறக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
12—11—74.

## நாவலர் பிள்ளைத்தமிழ்

ஏழாவது :- அம்புலிப் பருவம்.

**ஆக்கம் : — "பழைய பாணி" —**

(முன் வளர்ச்சி — 32)

கண்டனந் தொடுத்துளறு கழிமடப் போதகர்
கருத்தழிந் திடக் கலக்கிக்
கருதரிய பொருளுண்மை காட்டிநிலை நாட்டுமன்
கண்டனந் தேர்கிலாக்குத்
தண்டமும் புரிந்தனையர் தவறுணர்த் திடுமிவன்
**தண்டமோ வஜ்ர தண்டம்**
சரித்திர மறிந்ததிது சற்றுநீ யறியாய்கொல்
தவறிழைத் திடல்மதியமே
வண்டமிழ் வள்ளுவர் **வழிமாண்ட** வாய்மொழி
மனங்கொளற் கமையுமினும்
வாழ்வையேற் கேட்டிய்தி மாள்வையேற் பட்டழிதி
மதிமோச மெய்தாயெனில்
அண்டரு **மஹத்** தெங்க ளாறுமுக ஐயனுட
னம்புலீ யாடவாவே!
அழகுதமிழ் தழையவரு மாசானெ மையனுட
னம்புலீ யாடவாவே! . (10)

## மாணவர் பக்கம்

செல்வன் க. சர்வானந்தன்
யாழ். மத்திய கல்லூரி.

### இலக்கியப் பூங்காவில் … …!

எண்ணமெலாம் உனதன்றே என்னுயிராய் நிறைந்தவளே
அன்னை கலைமகளே! அருந்தமிழின் திருவுருவே!!
உன்னை நினைப்பவர்கள் உள்ளத்தின் ஒளிவிளக்கே!
பொன்னைப் புகழைப் பணியாமல் உன்னைப் பணிந்தேன் என் தாயே

(கல்லூரி தமிழ்மன்றப் பொன்விழாவிற் பாடியகவிதையிலொன்று

### விநாயகர் விரதம்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில விநாயகர் விரதம் 30-11-74 சனிக்கிழமை ஆரம்பமாகி (19-12-74) வரை 21 நாட்கள் விநாயகர் விரதம் அனுட்டிக்கப் பெறும். (1) மாலை 6-30 அபிஷேக ஆராதனை (2) 6-45 விநாயகர் அகவல் விநாயகர் கவசம், பிள்ளையார் புராணம் என்பன பாராயணம் செய்தல் (3) இரவு 8 மணி விசேட பூசை.

வெள்ளி (இன்று) சர்வாலயதீப உற்சவமும் (மாலை 5 மணி) சனி இரவு 8 மணி கந்தபுராண பாராயணப் பூர்த்தி விழாவும் நிகழும்.

### மக்கள் மனம் மாறினர்

### கலாவெவாவில்

கலாவெவா இடைத் தேர்தலில் ஐ தே. கட்சி வேட்பாளர் திரு. ஏ. எம். எஸ் அதிகாரி 13, 799 வாக்குகள் பெற்றுச், சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. டி. பீ இரத்தின மலலவை 2851 வாக்குகளாலே வென்றனர்.

தனியாக நின்றவர்கள் முறையே 2780, 200, 108 வாக்குகளும் பெற்றனர்.

## நாம் உய்ய வழி

தேவர்கள் சூரபன்மன் முதலிய அவுணர் கூட்டங்களோடு தீராத பெரும்பகை கொண்டு 108 யுககாலமாக சூரபன்மனினாலே துன்புறுத்தப்பட்டார்கள். தங்கள் துன்பததை ஒழிக்க எவரும் இல்லாது எம் பெருமானாகிய சிவ பரமபொருளே தமக்குத் தஞ்சம் என்று கருதி அவரை அடைந்து தங்களது துன்ப நிலையை உணர்த்தினார்கள். அப்பொழுது பெருமான் அவர்களிடம் இரங்கி உங்கள் துன்பத்தைத் தீர்ப்பதற்கு ஒரு சற்புத்திரனைத் தருகின்றோம்'' என்று ஆறுமுகத் திருக் கோலத்தைக் கொண்டு அந்த முகங்களிலே உள்ள நெற்றிக் கண்களிலே நின்றும் ஆறு தீப் பொறிகளைத் தந்து அப் பொறிகளே முருகப் பெருமானாக தோற்றுவித்தார். அங்ஙனம் தோற்றுவித்தது தேவர்களைப் பார்த்து "உங்களுடைய துன்பங்களை ஒழித்தற்கு உரிய புத்திரன் இவனே. நீவிர்களும் இவனோடு சென்று இவன் வாயிலாக உங்கள் துன்பத்தை ஒழியுங்கள் என திருவாய் மலர்ந்தருளினர். அவர்களும் முருகப் பெருமானோடு வந்து தாரக சம்மாரத்தைச்செய்து திருச்செந்தூர்ப் பதியின் கண்ணே வந்து சூரபன்மனை ஒழித்தற்காக அங்கு நின்றும புறப்பட்டு மகேந்திரபுரத்தை அடைந்து அங்கு பாசறை ஆலயம் உண்டாக்கி அதில் எழுந்தருளி இருந்து அவுணர்கூட்டங்கள் எல்லாவற்றையும் அழித்த இறுதியில் சூரபன்மனோடு பெருமான் எதிர்த்துப் போர் செய்தார். அப்படிப் போர் செய்தும் அவன் தன்னுடைய தவ வலிமையினாலே அறுநாள் அழியாது எதிர்த்து நின்று பெருஞ் சமர் செய்தான். அப்பொழுதும் தேவர்களையே வருத்தினான், தேவர்கள் அதனை உணர்ந்து பெருமானைக் குறித்துப் "பெருமானே! எங்களால் அவனுடைய கொடுமையைச் சகிக்க முடியாத நிலையில் உள்ளோம். ஆகவே இவனைச் சம்மாரம் செய்து எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்றமையைக் குறிததே "நண்ணின க்கு இனியாய் ஓலம் ……" என்ற செயுளைப் பாடிப் பெருமானை வேண்டி தங்களுடைய முழுத் துன்பத்தையும் ஒழித்து முடிவிலே முருகப்பெருமான அருளைப் பெற்று உய்ந்தார்கள்.

அத் தன்மைபோல் நாமும் எமக்கு வந்த துன்பங்களை ஒழித்தற்கு கடவுளை வேணடி. அவரே தஞ்சமென்று அடைந்தாலே அல்லாது இன்றைக்கு எமக்குள்ள பல வகைத் துன்பங்களும தீரமாட்டா. ஆகவே நாம் எல்லோரும பெருமானையே சிந்திதது எங்களுடைய துன்பங்களை எல்லாம் நீக்கிக்கொள்வோமாக இந்த மார்க்கமே அல்லாது நமக்கு உய்யும் வகை வேறொன்றுமில்லை.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி"

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 29—11—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெறறது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்

ஆசிரியர் : திரு. மூ. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிது கொடிது கார்த்திகைக் கோடை கொடிது

— டாக்டர் என். கனகரத்தினம், யாழ்ப்பாணம் —

கோடை வளம், மாரி வளம் நமக்கு பல்காலப் பழக்கத்தால் தெள்ளிதில் புலப்பட்டு கோடையில் வெயிலும் அதற்கிசைந்த வெப்பமும், மாரியில் தண்மையும் அத்துடன் கூடிய குளிர், பனி சீதளம் முதலியனவும் நாம் ஆண்டாண்டு தோறும் அனுபவித்து அக்காலங்களுக்குரிய இயற்கை செயற்கை வனப்புக்களைக் கண்டு காலங்களித்தோம். ஆனல் தற்பொழுதில் முன்னொரு போதுங் கண்டிராத கால மாற்றந் தோன்றி இக்காலத்தை "மாரியில் கோடை" என்றழைப்பதோ என நமது மனே பான்மைக்குத் தோற்றுகிறது!

"விசும்பிற் றுளிவீழின்
அல்லால் மற்றாங்கே
பசும்புற் றலைகாண்ப
தரிது"

வள்ளுவப் பெருந்தகை பசும்புல் தலை காண்பது அரிது என்னுமிடத்து நீருயர உயரும் நெல், துளிதன்னும் இல்லாத மாரிக் கோடையில நெற்பயிர் தன்னுங் காணக்கூடுமோ?

ஆங்கிலக் கலைஞர் சேகஸ்பியர் (Shakespeare) அவரது "மிட் சம்பர் நயிற்ஸ் றீம்" (Mid summer Night's Dreem) என்னும் நாடகக் கதையில் காலமாற்றம் தெய்வத்தின் செயலன்றி வேறல்ல என எடுத்துக் காட்டும் பகுதி சிந்தனைக்குரியது.

"Therefore the moon the governess of floods Pate in her anger, washes all the air, and though the distemperature we see the seasons alter.

The spring the summer, The childing autum angry winter Change.

Their wanted liveries... and this same progeny of evils comes, we are their parents and original

பகலவன் உச்சிமேல் வானத்தில் ஊரும் பங்குனியோ ஆதித்தன் ஆக்கிரமிக்கும் ஆவணியோ எவரும் ஐயுறும் வண்ணம் அனலும் வெப்பமும் ஆகாலப் பனியும் வெயிலும் பசி பட்டினியுடன் சேர்ந்து, நோயுந் துன்பமுந் துயருமாக தலை தூக்கிவிட்டது

உலகில் தர்மங் குறைந்த காலத்தில் அவதார புருஷர்கள் தோன்றி ஆவன செய்வர் கொழும்புத்துறை திர்க்கதரிசி யோகசுவாமிகள் பல ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சம் பசிபட்டினி தோன்றுங் காலம் உண்டென்று தெரிவித்துள்ளர் இச் சம்பவத்தை தனது சீஷரில் முதன்மையான போஷ சோல்பரி அவர்களுக்கு அறிவித்துள்ளார். இதை யோகி அவர்கள் எனக்கு ஒருமுறை சொன்னர் சுவாமி அவர்கள் தனக்கு அறிவித்ததையுஞ் சொல்லி தான் செங்கலடியில் நெல் விளைவித்தலையும் பயன்கருதாச் சிவத்தொண்டு கர்மயோகம Work IS Worship என்றுஞ் சொன்னர்,

பற்றையும் புல்லும் அடர்ந்து படர்ந்து பார்க்குமிடமெல்லாம் பச்சைப் பளீர் என்று இருக்க வேண்டிய இந்நேரத்தில் எங்குமே மணற்காடாகக் கானலடித்துத் தோற்றமளித்தலை நாம் கண்ணுரக் காண்கின்றோம் இது யார் செய்த பழியோ இதனுல் நேரப்போவது யாதோ!

வழை கமுகு தென்னை மற்றும் தாவரங்கள் வாடி வதங்கி வட்டுச் சரிந்து அழிந்தொழிவதை காணலாம் வெள்ளத்திற்கு வரம்பு கட்டும் காலத்தில் பாத்திகள் கட்டி மரங்களுக்கு நீர் பாச்சுதலைப் பார்க்க விந்தையாய் இருக்கிறதே

குளமுடைத்துக் குடிகளைக் தாக்குங் காலத்தில் குளங்கள் மணற்காடாகத் தோற்றம் அளிப்பது நம் மனோர் முன்னொரு போதுங் காணுக்காட்சி

பாலைக் கறந்திதரும் பசுக்களும் கோடையில் கட்டுண்டு காய்ந்து வறண்ட உணவை உண்டு பொறுமையுடன் இருந்து மாரியிலாவது சுதந்திரமாக நடமாடி நமது இஷ்டப்படி பசும்புல்லை மேய்ந்து பசியாறித் துள்ளித் திரிந்துபயனளிப்போமென்று எண்ணத்தில் ஏமாற்றமுற்றன!

பசுவின் பாலை கைவிட்டு சங்கடமில்லாமல் சாய்ப்பில் பெட்டியில் அடைத்த பால் மா வேண்டிப் பருகி வந்த காலம்போக பசுவின் பாலைக் காத்திருந்த பச்சிளங் குளந்தைகளும், மூப்புடையோரும், நோய்வாய்ப்பட்டாரும் பசுவினங் குன்றினல் பதைப்பார்களன்றோ!

மனிதனுக்கு எதுதானில்லாவிட்டாலும் சகிக்கலாம். நீர் இல்லாவிட்டால் என்ன கதியாகும்! "கொடிது கொடிது வறுமை கொடிது" வறுமைக்கு கால் மழையின்மை அன்றோ! மழை இல்லாவிட்டால் பயிரில்லை, பயிரில்லாவிட்டால உணவில்லை, உணவில்லாவிட்டால் உலகில்லை.

"சீரைத் தேடின் ஏரைத் தேடு" உலகமே இக்கோட்பாட்டில் விழித்திருக்கிறது என்பதை ஐக்கியநாட்டு ஊக்கத்திலிருந்து அறியவருகிறது. "வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகோலிவை" இத் தெய்வமொழியை எக்காலத்திலும் அனுசரித்தால் நமது கெடுபிடிகளுக்கு பரிகாரம் காண்டல் எளிது.

## புங்குடுதீவில் பன்முகவிழா

புங்குடுதீவில் 21- 1-74 வியாழக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் பலவிழாக்கள் ஒரு சமயத்தில் நடைபெற்றன. சர்வோதயநிலையத்தார் ஒழுங்கு செய்திருந்த வனமகோற்சவ விழா வெகு சிறப்பாக நடைபெற்றது சர்வோதய நிலையத்திலிருந்து மாட்டு வண்டிகளில் ஊர்வலம் ஆரம்பித்துக் கேரதீவிலுள்ள மாதிரிக் கிராமத்தை அடைந்தது, சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்கள் சிவஸ்ரீ சி. நாகேந்திரக்குருக்கள் குருபத்தினிமார் முதலாகப் பெண்கள் பலரும் விழாவிற் கலந்து கொண்டார்கள் மில்க்வைற் சவற்காரத் தொழிலக அதிபர். திரு. க. கனகராசா அவர்கள் ஏராளமான மரக்கறி விதைகளும் மா, பலா, தோடை ஈரப்பலா, எலுமிச்சை மாதுளை, நெல்லி. தென்னம்பிள்ளை ஆகிய பயிர்களும் உபகரித்து மேற்படி விழாவிலும் கலந்து கொண்டார் கேரதீவு ஐயனர் கோவிலைச் சூழவுள்ள நிலப் பரப்பில் அமையும் மாதிரிக் கிராமத்தில் வேதமோதியும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அந்தனை எனத் தொடங்கும் திருப்பதிகம் ஓதியும் ஐயனர் கோயிலில் சிறப்பான பூசையும் நடைபெற்றது. பூசை முடிவில் வனமகோற்சவத்தில் கலந்து கொண்ட காரியதிகாரி திரு. மு, கார்த்திகேசு, பதவியேற்கும் காரியாதிகாரி திரு குமாரசுவாமி மண்டை தீவுக் கிராமசபைத் தலைவர் திரு. க, கைலாசபிள்ளை, பூலோக கற்பக நாயகர் கனகராசா முதலானோர் மரங்களை நாட்டினர் மரங்கள் நாட்டப்பட்ட போது சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் வெகு உருக்கமாக வேதபாராயணஞ் செய்து ஆசிர்வதித்து மரங்களிலெல்லாம் இறைவன் எழுந்தருளியுள்ளான் என விளக்கங் கூறினர்

வன மகோற்சவத்தின் பின் சர்வோதய நிலையதில் தேசியப் பேரவை உறுப்பினர் பணடிதர் க. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் இரு விழாக்கள் நடைபெற்றன. முதலில் திரு கனகராசா அவர்கள் நாட்டுக்குச் செய்யும் சேவை அரசாஙகத்தின் சேவையிலும் பார்க்கப் பெரிதென்றும், அரசாங்கம் செய்யத் தவறிய மகத்தான சேவையை வள்ளல் கனகராசா தனிமையாய்ச் செய்து வருகிறார் என்றும்; அவர் செய்துவரும் பனைமர அபிவிருத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகமிக அத்தியாவசியமானதென்றும் கூறினார்.

சர்வோதய நிலையத்தார் திரு கனகராசா அவர்களுக்கு 'விருட்ச சஞ்சீவி' என்னும் பட்டத்தை அவர் வழங்கியதும் அப் பட்டமளிப்பின் அறிகுறியாக சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் அவர்கள் கனகராசா அவர்களுக்கு மலர்க்கிரீடம்' ஒன்றைச் சூட்டிவாழ்த்தினர்கள். மரங்கள் அழிந்து போகாமல் காத்துவரும திரு. கனகராசா அவர்களுக்கு விருட்சசஞ்சீவி என்னும பட்டம் சாலப் பொருத்தமானதே என்று பண்டிதர் இரத்தினம் அவர்கள் பாராட்டிப் பேசினர்கள்.

இதன்பின்பு புங்குடுதீவை விட்டுத் துணுக்காய்ப் பகுதிக்கு மாற்றலாகிச் செல்லும் காரியாதிகாரி திரு மு. கார்த்திகேசு அவர்களின் சேவை பாராட்டு விழா நடைபெற்றது, அவ் விழாவிலும் திரு கனகராசா அவர்கள் பங்கு பற்றியதோடு காரியாதிகாரி அவர்களுக்குக் காந்தியடிகளின் நூலை அன்பளிப்புச் செய்தும் பனைமரம் பொறித்த துவாயையும் போர்த்திச் சிறப்புச் செய்தார்கள்.

சர்வோதய நிலையப் பொறுப்பாளர் திரு. திரு [illegible] அவர்கள் இவ் [illegible] ஒழுங்கு செய்ததோடு நன்றியுரையும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை 14-ஆம் நாள் (29-11-74) வெள்ளிக்கிழமை

## இன்று பூரண சந்திரகிரகணம்

வடக்கில் பரிசம், வட மேற்கில் மோக்ஷம். பிரமாணம் ஒன்றேடு நூறில் முப்பது. நக்ஷத்திரம் ரோகிணி.

கிரகணதோஷ நட்சத்திரங்கள்:- கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ம் கால்கள், அத்தம், சித்திரை 3, 4-ம காலகள், சுவாதி, விசாகம் 1, 2, 3ம் கால்கள், திருவோணம், பூரணைச் சிரார்த்தம் மறுநாட் கொள்க.

| காலம் | இலங்கை |
|---|---|
| பரிசம் | 6-59 |
| பூரண ஆரம்பம் | 8-06 |
| மத்தியம | 8-44 |
| பூரண முடிவு | 9-22 |
| மோக்ஷம் | 10-29 |

எதியோப்பியாவில்

# ஏன் இந்தச் சிரச்சேதம்

## ஐ. நா. எடுக்கும் உடனடி ஆட்சேபம்

எதியோப்பியாவின் முடியாட்சியை கவிழ்த்துவிட்டு பதவிக்கு வந்த இராணுவ அரசு பல அரசியற் பிரமுகர்களையும் இராணுவத் தளபதிகள் சிலரையும் சிரச்சேதம் செய்துள்ளது மேலும் சிறையில் இருக்கும் இத்தகையினர்களைச் சிரச்சேதம் செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளது. எதியோப்பிய இராணுவ அரசின் இக் கொடூரமான காட்டுமிராண்டித்தனமான போக்கைக் கண்டித்து சில நாடுகள் குரல் எழுப்பியுள்ளன. இப்பொழுது ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் "சிரச்சேதத்தை நிறுத்துங்கள்" என்று எதியோப்பிய இராணுவ அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னுள் பிரதமர் அரசாங்க உயர் அதிகாரிகள் மன்னர் பரம்பரையினர் பலர் இதுவரை சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளனர்.

## இருபெரு நீதிகள்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

பிழைத்தார்; அவர் செயல் நகைப்புக்கிடனாயிற்று.

அவதூருக ஒரு சிறிதும் பேசவில்லையென்று மறுத்து எல்லோராலும் நகைக்கப்பட்டது அவ்வழக்குப் புத்தகம் பேசும்' என்கின்றூர் நாவலர். (நாவலர் பிரபந்தம், மித்தியவாத நிரசனம் 13 ம் பிரிவு பார்க்க)

வழக்கு நடந்து நூறுவருடத்துக்கு மேலாகின்றது. நாவலர் சரித்திரம் எழுதியவர்களோ, மற்றும் நாவலர் அபிமானிகளோ வழக்குப் புத்தகம் என்ன பேசுகிறதென்பதைக் கண்டுபிடிக்கவில்லை.

நூற்றாண்டுகளின் பின் ஓரே ஒருவர்-கலாநிதி தனஞ்சயராசசிங்கம் வழக்குப் புத்தகம் பேசுவதைக் கண்டு பிடித்திருக்கின்றூர். வழக்கில் நடந்தவைகளைத் தக்க ஆதாரத்துடன் அட்சரந்தவருமற் கண்டு பிடித்திருக்கின்றூர் கலாநிதி.

மத்தியவாணி, கலாநிதி தனஞ்சயராசசிங்கத்துக்கு நல்வாழ்த்துக் கூறி, வழக்கு விபரத்தை வெளிப்படுத்த வழிவகுக்கட்டும்; வழக்கு விபரத்தில் பேர்சிவல் கொடுத்த நற்சான்றிதழைப் படித்து, 'நாவலர் பேர்சிவல்' தொடர்பை மாணவர்கள் ஆராயவைக்கட்டும்.

நாவலர் பிரபந்தத்தில் "யாழ்ப்பாணச் சமயநிலை" என்ற கட்டுரையை பதினுயிரக் கணக்கில் அச்சிட்டுப் பரப்புவது அவசியத்தின் மேலவசியம்; அத்தியாவசியகம்; இன்றைய நமது நிலையை உணர்தற்கு அது பேருபகாரமாயிருக்கும். அக் கட்டுரையில் மத்திய கல்லூரியைத் தாபித்த பேர்சிவல் பாதிரியாரின் களங்கமற்ற போக்கை நுண்ணிதின் ஊகித்தற்கும் அது உபகாரமானது.

வாணிக்குரிய நவராத்திரி தினத்தில், மாணவர்களுக்கு மதிநலம் பெருகவும். மாணவர்கள் தம் நிலை உணர்ந்து நல்லது செய்யவும் மத்தியவாணியின் உபகாரம் ஊற்றெடுப்பதாக.

மத்தியவாணி வாழ்க.

"மத்தியவாணி" — (2) 1974

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

ஆனந்த ௵ கார்த்திகை௴ கசஉ வெள்ளி

## சைவச் சால்பு மறைவழி மரபு

சமயிகளாக வாழ்வதற்குச் சாதனங்களாகவே நாவலர் நற்றகையார் நமக்கு வினாவிடை, பாலபாடம், சூசனங்கள் ஆகியவற்றை அந் நாளிலே வகுத்துதவினர் மதம், மொழி, இனம் என்றின்னனவெல்லாம் மரபு வழியைப் பின்பற்றியே வருகின்றன. இந்த நன்னெறிக்குப் புறநடை இருக்கவொண்ணாது: பழையன கழிதலும் இல்லை; புதியன புகுதலும் இன்று எனவே சைவ சமயத்தவர்கள் வாழ்க்கை நெறி தோன்றுதோட்டு வழங்கிவரும மரபினால் வரையறை செய்யப்பெற்றுள்ளது வேத சிவாகமங்கள், மெய்கண்ட சாத்திரங்கள், திருமுறைகள், புராண இதிகாசங்கள் புகட்டும் உண்மைகளை நெறியாக நெடுங்கால முறையாகச் சைவ மக்கள் அமைத்துக் கொண்டனர். நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைக்கமாட்டார்கள் என்றால் அதனை எடுத்துரைப்பார்களா? அன்றித் தொகுத்துச் செயலில் அமைப்பார்களா?

திருமுறை ஓதும்போது திருச்சிற்றம்பலம் என்று வணக்கம செலுத்தியே ஓதுவார்கள் அடியார்கள். அலுவல்கள் ஆரம்பிக்கும்பொழுது ஐங்கரனைத் தொழுமுகமாகப் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவார்கள்.

எழுதும்போதெல்லாம் பிள்ளையார் ( உ ) சுழி, சிவமயம், பொறித்த பின்பே வாசகம் வரைவார்கள். திருமுறையை அச்சேற்றுவதென்றால் முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று சிவநெறி முத்திரையிடுவார்கள்.

காயமே கோயிலாகக் கொள்ளுவார்கள். நீறில்லா நெற்றி பாழ் என்றவாறு திருநீற்றின் செம்மை திகழ்ந்த வதனங்களே சைவ சமயிகளின் சின்னங்களாகும். **"அக்குமாலை கொடு அங்கையில் எண்ணுவார்"** என்றபடி உருத்திராக்கத் திருமணியே அணியாகக் கொள்வர். ஐந்தெழுத்தேயுவந்தனவாய் ஓதுவர். இதுவே பழையமுறை, சமய நெறி, சைவ மரபு. இவற்றில் எவற்றையேனும் சைவ மக்கள் **எக்காலத்திலும் கைவிட முடியாது, கை விடின் சமயத்தையே கைவிட்டவர்கள் ஆவார்.**

## சமயத்துக்கு ஆகும் வேடம்?

"இறை—ஒளி"

சுழியும் சிவமயமும் சைவம் துலங்க
எழுதும் மரபுண்டாம். இன்றேற் —பழியே!
சமய நெறிகாட்டும் சாதனங்கள் பேணர்
சமயத்துக் காம்வேடத் தார். [50]

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை

### சாந்தையர் மடத்தில்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவு விழா 6-12-74 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு பெரியபுலம் தமிழ்ப் பாடசாலையிலும், வடமாநில சைவ இளைஞர் மாமன்ற ஆதரவில் இரவு 7-00 மணிக்கு சாந்தையர் மடம் பிள்ளையார் கோவிலிலும் நடைபெறும்.

### நாயன்மார்கட்டில்

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராஜேஸ்வரி பேய்ச்சயம்பாள் கோவிலில் சைவ சமய அபிவிருத்திக் கழக ஆதரவில் நாவலர் பெருமான் குருபூசைவிழா எதிர்வரும 5-12-74 வியாழக்கிழமை மாலை கொண்டாடப்பெறும்.

[ ஆக்கந்தரும பயிர்களும
பழங்களும ]

## நெல்லி

நெல்லிக்காய்ப் பருவகாலம் நெருங்கி வருகிறது, நம்மை நீண்ட காலம் வாழச் செய்யும் நெல்லியின் பெருமை அதிகம். சங்க முன் தொடங்கியே எங்கள் முன்னோர் நெல்லிக் காயைத் தேடி உண்டு நிறைவுபெற்றனர். உயிர்ச்சத்து நிறையவுள்ள நெல்லியின் ஊட்டம் அதிகம்

சிறியிலை நெல்லித்தீங்கனி, சாதல் நீங்க எமக்கீந்தனையே என்று ஔவையார் அதிகமானைப் போற்றினார். அதனை அமிழ்ந்து விளை தீங்கனி எனச் சிறு பாகுற்றுப் படை பாடிய நத்தத்தனார் போற்றினர். நெல்லியமுது எனப் புலவர்கள் பலர்போற்றியுண்டனர். அதன் புளிப்புத் தன்மையை நெல்லியம்புளித் திரள்காய் என்றும் அவர்கள் போற்றினர். இனிய கனிச் சுவையுறது நெல்லிக் கனி போல அமிழ்தானவற்றை என்று பரிமேலழகர் இக் கனியை வியந்து கூறியுள்ளார்.

தோடம்பழத்திலும் பார்க்க நெல்லிக்காயில் அதிக உயிர்ச்சத்துண்டு. ஒரு நெல்லிக்காய் மூன்றுதோடம்பழத்துக்கு நிகராகும் என்பர்.

நெல்லிக்காய் மூளை, வயிறு, குதில், இருதயம், ஈரல் சுவாசப்பை ஆகிய உள் உறுப்புக்களுக்குப் போதியளவு வலிமையை உண்டாக்குவது பசியை உண்டாக்குவதோடு உணவைச் சமிபாடாக்குவது மலத்தை இளக்குவது, குடலைச் சுத்தம் செய்வது. வாயில் இட்டவுடன் எச்சில் ஊறுகிறது. பற்கள் சுத்தமாகின்றன, கணைச்சூடு நீங்குகிறது, வாயு நீங்குகிறது பாலர் முதல் பாட்டிமார் வரை, பாவலர் முதல் பாமரர் வரை நெல்லிக் காயை விரும்புவர். அத்தனை பெருக்கும் நெல்லி அருமருந்தனைய அருங்கனியாகும். நீரிழிவு, காமாலை நோயாளருக்கு நிகரற்ற மருந்தாகும். நெல்லியைப் பற்றிக் கூறாத வைத்திய நூல்கள் இலலை தமிழ் நாட்டு வைத்தியர்களும், சித்தர்களும் முனிவர்களும், நெல்லிக்காயைத் தேடியுண்டு பிறரையும் உண்ணுமாறு கூறியுள்ளனர்.

யூனானி வைத்தியர்களும் நெல்லியின் ஊட்டத்தைப் போற்றுவர் நெல்லிக்காயைப் பலவிதமாகப் பாகஞ் செய்தும், பாதுகாத்தும் பக்குவம் செய்தும் உண்ணலாம் ஊறுகாயாகவும், லேகியமாகவும், பாகாகவும், சாறுகவும், வற்றலாகவும் பாகஞ் செய்யலாம், வடகமாகவும் பொரித்துண்ணலாம்.

நெல்லிக் காயை எவரும் இரவில் உண்ணலாகாது. கருப்பவதிகள் என்றும் உண்ணலாகாது என்பது பெரியவர்கள் சொன்ன வாசகம்,

அமிர்தம் போன்ற நெல்லிக்காயினால் பைத்தியம், கபம், பிரசம், வாயூறல, வாந்தி மலபந்தம். தலைச்சுற்று, பிரமேகம் முதலிய பல நோய்கள் நீங்கும்.

நேல்லிக்காய் உண்டு நெடுநாள் வாழ்க.

அந்த அந்தப் பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கு அந்த அந்தப் பருவகாலததில் இறைவன் தரும் பழ வகைகளை நாம் பயன்செய்தல் வேண்டும். அவை எமக்காகவேயுள்ளன. இந்த நெல்லிக்காய்ப் பருவத்தைப பயன் செய்வோமாக என்று மிலக் வைற் தொழிலக உரிமையாளர் திரு. க கனகராசா அவர்கள் எல்லோரையும் வேண்டுகிறார்.

உ

## திருமண அழைப்பு

இராஜ இராஜேஸ்வரன் — இரஞ்சினி

திருவருளை முன்னிட்டு நிகழும் ஆனந்த ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16-ம் (1—12—74) நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கும் நண்பகல் 12-00 மணிக்குமிடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில்.

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>இராஜ இராஜேஸ்வரன்<br>(Advocate) சட்டத்தரணி<br>பிரசித்த நொத்தாரிசு,<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>இரஞ்சினி<br>M. B. B. S. (Cey)<br>அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் நடக்கவிருக்கும் திருமண வைபவத்திற்கும், மணமகன் இல்லத்தில் மாலை 6-00 மணி தொடக்கம் 8-00 மணி வரை நடக்கவிருக்கும் வரவேற்புசாரத்திற்கும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு உறவினர்களையும். நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்:

(மணமகன் தமது இல்லத்திலிருந்து காலை 8-30 மணிக்கு புறப்படுவார்)

| | |
|---|---|
| திரு ச. தங்கராஜாவும்<br>(Advocte)<br>பாரியாரும்<br>"சர்வாலயம"<br>5. செட்டித்தெரு, நல்லூர் | Dr தி. கனகரத்தினமும்<br>பாரியாரும்<br>"மங்களபதி"<br>11. டச் வீதி, தெல்லிப்பளை. |

223/74

## வையம் போற்றும் நாவலர்

"பருளாய் - விநாயகன்" — "நாயன்மார் - நாதன்"

வாழ்க ஈழம், தமிழகம்
வாழ்க இனிது வாழ்கவே
வையம போறறி என்றுமே
வளம மிகுந்து வாழ்கவே. [1]

வாழ்க எங்கள் சிவநெறி
வாழ்க எங்கள் செந்தமிழ்
வாழ்க என்றும் வாழ்கவே
வண்மை மிக்கு வாழ்கவே. [2]

வாழ்க நல்லை நாவலர்
நாமம் என்றும் வாழ்கவே
வாய்மமை மிக்த வாழ்வீலே
வளம் மிகுந்து வாழ்கவே. [3]

வையம் போற்றும் நாவலர்
வண்த மிழ்சேர் வித்தகர்
தெய்வத் தமிழைப போற்றியே
தேசங் காத்த முத்தவர் [4]

கண்ணெ னவே சைவத்தைக்
காத்து வந்த சோத்தவர்
எண்ணி லாத ஆண்டுநாம்
ஏத்திப் போறறி வாழ்த்துவோம் [5]

## கிழக்குமாகாணத்தில் பனம் விதைகள்

பனை மகோற்சவ தினத்தைக் கிழக்கு மாகாணத்தில் கொண்டாடும் பொருட்டு இன்று 29-1. -74 வெள்ளிக்கிழமையன்று மட்டக்களப்பு இராமகிருஷ்ண ஆச்சிரம மண்டபத்தில் வைத்துப் பனம் விதைகளை மில்க்வைற் சவற்கார தொழிலகத்தினர் இலவசமாக விநியோகம் செய்ய விருக்கிறார்கள் பனம் விதைகளை நடவிரும்புவோர் மேற்படி ஆச்சிரம மண்டபத்தில் தேவையான விதைகளைப் பெற்றுச் செல்லாம் அன்றைய தினம் தொழில் முன்னிலைப் பாட விரிவுரையாளர் திரு. சு. பரநிருபசிங்கம் அவர்களால் பனையின் பயன்களைப் பற்றிய விரிவுரைகளும் நடைபெறும்.

நீரைத் தேக்கி நிலத்தை வளஞ் செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org